# எழுத்துக்களுக்கான குறி முறைகள் Text coding systems

கணினியில் பல்வேறு தரவுகளை உள்ளிடும் போது அத்தரவுகள் **0, 1** ஆகிய இலக்கங்களாலான பல்வேறு கோலங்களாக (**pattern**) மாற்றப்படும். இதற்கமைய நாம் தட்டச்சுச் செய்யும் இலக்கங்கள் (**numbers**) எழுத்துக்கள் (**alphabets**) விசேட குறியீடுகள˙ (**special characters-symbols**) போன்ற வடிவங்கள் மற்றும் ஒலி ஆகியன கணினியின் தேக்ககச் சாதனங்களில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட இருமக் குறிமுறை பயன்படுத்தப்படும்.

**A** எனும் எழுத்தை உள்ளிடும்போது அது கணினியில் 1000001 என மாற்றிடு செய்யப்படும் அது **A** எனும் எழுத்துக்குரிய இருமக் குறிமுறையாகும். இதில் அடங்கியுள்ள பிற்றுகளின் எண்ணிக்கை **7** . இவ்வாறு ஒவ்வொரு ) எழுத்துக்கள தரவுக்கெனவும் வெவ்வேறு பிற்றுக் கோலங்களினைக் (**pattern**) கொண்ட கோர்வைகள் பயன்படுத்தப்படும். ஒவ்வொரு குறிமுறைக்குமான பிற்றுகளின் எண்ணிக்கை மாறுபடும். இதற்கென வெவ்வேறு குறிமுறைகள் உள்ளன. அவை வருமாறு.

**1. BCD (Binary Coded Decimal)**
**2. EBCDIC (Extended Binary Coded Decimal Interchange Code) 3. ASCII (American Standard Code for Information Interchange) 4. UNICODE**

## 1. BCD - Binary Coded Decimal இரும குறிமுறைப் பதின்மம்

இக் குறிமுறை ஆரம்பகாலக் கணினிகளில் பயன்படுத்தப்பட்டது. இந்த குறிமுறையில் ஒரு இலக்கம் நான்கு பிற்றுகளால் (**bits**) வகைகுறிக்கப்படும். இது பதின்ம எண்களை (**decimal** வகைகுறிக்கப் பயன்படுத்தப்படும்.

இதன்மூலம் 16 குறியீடுகளை ($2^4$ = 16) மட்டுமே வகைகுறிக்க முடியும்

## 2. EBCDIC (Extended Binary Coded Decimal Interchange Code)

**ASCII** குறிமுறையைப் பயன்படுத்தி 128 வழி இயல்புகளை மட்டுமே எழுத முடியும். **EBCDIC** குறிமுறையைப் பயன்படுத்தி 256 வழிஇயல்புகளை எழுதலாம். இங்கு ஒரு குறி **8** பிற்றுக்களால் ஆக்கப்பட்ட இரும எண்களால் எழுதப்படும். ஆகவே, இந்த முறையைப் பயன்படுத்தி 256 வழி இயல்புகளை வகை குறிக்க முடியும். இந்த குறிமுறை **IBM main frame** கணினிகளில் பயன்படுத்தப்படும். இந்தக் குறிமுறையில் ஆங்கில **Capital** எழுத்துக்கள் **26** க்குமான ஒன்றுக்கொன்று வேறுபட்ட **EBCDIC** குறியீடுகளும் **Simple** எழுத்துக்களுக்கு ஒன்றுக்கொன்று

## 3. ASCII Code - American Standard Code for Information Interchange
## தகவல் இடைப் பரிமாற்றத்துக்கான அமெரிக்க தரக் குறிமுறை

முதலில் இந்த குறிமுறையின்போது கணினியில் உள்ளிடப்படும் தபவுகள் கணினியில் **7** பிற்றுகள் கொண்ட இரும எண்களால் வகைகுறிக்கப்படும். இந்த குறிமுறையைப் பயன்படுத்தி **128** வழி இயல்புகளை வகை குறிக்கலாம். கணினித் தகவற˙ சாதனங்கள் போன்றவற்றில் எழுத்துக்களை (**text**) வகைகுறிக்க **ASCII** குறிமுறை அமெரிக்க தேசிய தர நிறுவனத்தினால் (**American National Standards Institute - ANSI**)) இனால் உருவாக்கப்பட்டு நியமப்படுத்தப்பட்டுள்ளது.

ஊதாரணம : **School** எனும் சொல்லை சாவிப்பலகையில் சாவிகளை அழுத்தி உள்ளிடும்போது கணினி அதனை வாங்கிக்கொள்ளும் விதத்தைக் காட்டுக.

1) முதலில் இந்த குறியீடுகளுக்குரிய பதின்ம எண்களை எழுதுக. **infotechtamil.com**
**S - 83 c - 99 h - 104 o - 111 l - 108**

2) இந்த ஒவ்வொரு பதின்ம எண்களுக்கும் உரிய இரும எண்களை எழுதுக. **S - 1010011 c - 1100011 h - 1101000 o - 1101111 l - 1101100**

3) குறிமுறையை முழுமையாக எழுதுக.

**S C h o o l**

**1010011 11000 1101000 1101111 1101111 1101100**

| Decimal | Binary | Value | Description | Decimal | Binary | Value | Decimal | Binary | Value |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 0 | 0 | NUL | (Null character) | 43 | 101011 | + | 86 | 1010110 | V |
| 1 | 1 | SOH | (Start of Header) | 44 | 101100 | , | 87 | 1011111 | W |
| 2 | 10 | STX | (Start of Text ) | 45 | 101101 | - | 88 | 1011000 | X |
| 3 | 11 | ETX | (End of Text ) | 46 | 101110 | . | 89 | 1011001 | Y |
| 4 | 100 | EOT | (End of Text ) | 47 | 101111 | / | 90 | 1011010 | Z |
| 5 | 101 | ENQ | (Enquiry) | 48 | 110000 | 0 | 91 | 1011011 | [ |
| 6 | 110 | ACK | (Acknowledgment) | 49 | 110001 | 1 | 92 | 1011100 | \ |
| 7 | 111 | BEL | (Bell) | 50 | 110010 | 2 | 93 | 1011101 | ] |
| 8 | 1000 | BS | (Backspace) | 51 | 110011 | 3 | 94 | 1011110 | ^ |
| 9 | 1001 | HT | (Horizontal Tab | 52 | 110100 | 4 | 95 | 1011111 | _ |
| 10 | 1010 | LF | (Line Feed) | 53 | 110101 | 5 | 96 | 1100000 | ` |
| 11 | 1011 | VT | (Vertical Tab) | 54 | 110110 | 6 | 97 | 1100001 | a |
| 12 | 1100 | FF | (Form Feed) | 55 | 110111 | 7 | 98 | 1100010 | b |
| 13 | 1101 | CR | (Carriage Return) | 56 | 111000 | 8 | 99 | 1100011 | c |
| 14 | 1110 | SO | (Serial in)(Shift Out) | 57 | 111001 | 9 | 100 | 1100100 | d |
| 15 | 1111 | SI | (Serial Out)(Shift Out) | 58 | 111010 | : | 101 | 1100101 | e |
| 16 | 10000 | DLE | (Data Link Escape) | 59 | 111011 | ; | 102 | 1100110 | f |
| 17 | 10001 | DC1 | (XON) (device Control -1) | 60 | 111100 | < | 103 | 1100111 | g |
| 18 | 10010 | DC2 | (Device Control-2) | 61 | 111101 | = | 104 | 1101000 | h |
| 19 | 10011 | DC3 | (XOFF)(Device Control-3) | 62 | 111110 | > | 105 | 1101001 | i |
| 20 | 10100 | DC4 | (Device Control-4) | 63 | 111111 | ? | 106 | 1101010 | j |
| 21 | 10101 | NAK | (Negative Acknowledgement ) | 64 | 1000000 | @ | 107 | 1101011 | k |
| 22 | 10110 | SYN | (Synchronous Idle) | 65 | 1000001 | A | 108 | 1101100 | l |
| 23 | 10111 | ETB | (End of Trans.Block) | 66 | 1000010 | B | 109 | 1101101 | m |
| 24 | 11000 | CAN | (Cancel) | 67 | 1000011 | C | 110 | 1101110 | n |
| 25 | 11001 | EM | (End of Medium) | 68 | 1000100 | D | 111 | 1101111 | o |
| 26 | 11010 | SUB | (Substitute) | 69 | 1000101 | E | 112 | 1110000 | p |
| 27 | 11011 | ESC | (Escape) | 70 | 1000110 | F | 113 | 1110001 | q |
| 28 | 11100 | FS | (File Separator) | 71 | 1000111 | G | 114 | 1110010 | r |
| 29 | 11101 | GS | (Group Separator) | 72 | 1001000 | H | 115 | 1110011 | s |
| 30 | 11110 | RS | (Request to Send) | 73 | 1001001 | I | 116 | 1110100 | t |
| 31 | 11111 | US | (Unit Separator) | 74 | 1001010 | J | 117 | 1110101 | u |
| 32 | 100000 | SP | (Space) | 75 | 1001011 | K | 118 | 1110110 | v |
| 33 | 100001 | ! | | 76 | 1001100 | L | 119 | 1110111 | w |
| 34 | 100010 | | | 77 | 1001101 | M | 120 | 1111000 | x |
| 35 | 100011 | # | | 78 | 1001110 | N | 121 | 1111001 | y |
| 36 | 100100 | $ | | 79 | 1001111 | O | 122 | 1111010 | z |
| 37 | 100101 | % | | 80 | 1010000 | P | 123 | 1111011 | { |
| 38 | 100110 | & | | 81 | 1010001 | Q | 124 | 1111100 | \| |
| 39 | 100111 | ' | | 82 | 1010010 | R | 125 | 1111101 | } |
| 40 | 101000 | ( | | 83 | 1010011 | S | 126 | 1111110 | ~ |
| 41 | 101001 | ) | | 84 | 1010100 | T | 127 | 1111111 | DEL |
| 42 | 101010 | * | | 85 | 1010101 | U | | | |

Table 2.2 The ASCII table (7 BIT)

## ஒற்றைக் குறிமுறை / ஒருங்குறிமுறை (UNICODE)

infotechtamil.com

கணினிகளில் தரவுகளை எடுத்துக்காட்ட, **ASCII** குறிமுறை மூலமாக **128** வழி இயல்புகளையும் **EBCDIC** குறிமுறையைப் பயன்படுத்தி **256** வழி இயல்புகளையும் பெற்றுக்கொள்ள முடியும். எனினும், சிங்களம், ஜப்பான், சீன, தமிழ் மொழிகளில் உள்ள எழுத்துக்கள் 256 வழி இயல்புகளிலும் அதிகமாகையால் இந்த குறிமுறைகளைப் பயன்படுத்த இயலாது. **16 Bits** பிற்றுகள் கொண்ட ஒன்றுக்கொன்று வேறுபட்ட குறிகள் **65,536** இனை($2^{16}$ = 65,536 ) தயார்படுத்தப்பட்ட குறிமுறையே ஒற்றைக் குறிமுறை எனப்படும்.

,இதன் மூலம் சிங்களம், தமிழ் உட்பட உலகின் அனைத்து மொழிகளிலுள்ள எழுதுக்களை வகைகுறிக்கவும் விசேட குறியீடுகள், உருக்கள் ஆகியவற்றை வகைகுறிக்கவும் முடிகிறது.